திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆலத்துறை நீர்ப்பாசனத் திட்டம் ஏற்கெனவே நிறைவேற்றப் பட்டு திறக்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர வர்கள் சொன்னதைப் போல அங்கு அடிக்கடி இராணுவ முகாம் இடுகின்ற காரணத்தால் வேலை தடைப் பட்டிருந்தது உண்மை. இப்போது மலைப் பகுதி வேலை முடிந்து, ஆற்றுப் பகுதி வேலை மட்டும் பாக்கி இருக்கிறது. இந்த நேரத்தில் வேலையை முடிக்கின்ற அந்தத் திட்டத்தை உடனடியாக மேற்கொண்டு, தண்ணீர் பயன்படுத்துவதை ரெகுலேட் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

பச்சையாறு திட்டம்

* வின—திரு. யா. சை. மு. யூசுப், திரு. மு. மு. அ. ரசாக்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், நான்குநேரி வட்டத்திலுள்ள பச்சையாறு திட்டத்திற்கு 1975 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப் பட்டும் வேலை தொடரப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் நிறைவேற அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் மறு பரிசீலனை செய்யப்படுகிறது. மேலும் கூடன்குளம் அருகே ஓர் அணு மின் நிலையம் அமைக்க இவ்வரசு மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது. அணு மின் நிலையத்திற்கான தண்ணீரையும் வழங்குவதற்கு பச்சையாறு திட்டத்தை மாற்றியமைக்க விரிவான ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

1978 மார்ச் 7]

திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர்களே, கூடன்குளம் அருகே அமைக்கப்பட இருக்கிற அணுமின் நிலையத்திற்கும் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கும் பச்சையாறு திட்டத்திற்கும் என்ன சம்பந்தம் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அணுமின் நிலையத்திற்குத் தண்ணீர் தேவை. பச்சையாறு மூலம் கிடைக்கும் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது யோசனை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, கூடன்குளத்தில் ஒரு அணுமின் நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் திட்டம் இந்த தமிழ் நாடு அரசால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதா? அது எத்தனையாவது பிரையாரிட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மத்திய அரசைப் பொறுத்தவரை, தென் பிராந்தியத்தில் எங்கெங்கே அணுமின் நிலையம் அமைக்கலாம் என்று இடத்தை தேர்வு செய்தபோது தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் கூடன்குளம் பகுதியில் அமைக்கலாம் என்று தெரிவித்து இருக்கிறோம். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் இந்தத் திட்டம் ஒரு உருக்கொள்ளவில்லை.

திரு. மு. அம்பிகாபதி: துணைத் தலைவர் அவர்களே, நீர்த் தட்டுப்பாடு மிகுந்திருக்கிற இந்த நேரத்தில் அணுமின் நிலையம் அமைப்பது என்பது வரவேற்கத்தக்கது. இந்த அணுமின் நிலையம் எத்தனை கோடி ரூபாய்க்கான திட்டம்? இத்திட்டம் முடிவடைய எத்தனை ஆண்டு ஆகும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மூலக் கேள்வி பச்சையாறு திட்டத்தைப் பற்றியது.

திரு. மு. ஜான் வின்சென்ட்: தலைவர் அவர்களே, முன்னாள் காங்கிரஸ் அரசில் பச்சையாறுத் திட்டம் கொண்டு வரப்பட்டு, 1974-75 ஆம் ஆண்டில் அன்றைய முதலமைச்சர் கருணாநிதி அவர்களால் அடிக்கல் நாட்டப் பெற்று, 225 லட்சம் ரூபாய்

செலவில் போடப்பட்டத் திட்டம் இது. இத்திட்டம் நிறைவேற்றப் பட்டால் 11,835 ஏக்கர் நிலம் பயன்படும். ஆகையால் இத்திட்டம் இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 28—2—1975 அன்று சில திட்டங்களை ஆராயமலே கொள்கை யளவில் ஏற்றுக்கொள்கிறோம் என்று அன்றைய அரசு அறிவித்தது. அப்படி அறிவித்ததில் இது ஒரு திட்டம். இந்தத் திட்டத்தின் மதிப்பு 464 லட்சம் ரூபாய். இதன் மூலம் புதிதாக பலன்பெறும் நிலம் 260 ஏக்கர்தான். மேலும் அதுபற்றிய குறிப்பில் என்ன இருக்கிறது என்றால், 10,203 ஏக்கர் இத்திட்டத்தின் மூலம் நீர் உறுதிப்படும். ஏற்கெனவே பாசன வசதி பெறும் பகுதி உறுதிப்படும். 10,203 ஏக்கர் நிலம் பாசன நீரால் உறுதிப்படுமா என்பது குறித்து மேலும் ஆராயப்பட வேண்டுமென்று வருவாய் வாரியம் ஒரு பிரச்சனையை எழுப்பி இருக்கிறது. ஆக, புதிதாக பாசனம் பெறும் நிலம் 260 ஏக்கர் தான். 10,203 ஏக்கர் நீர் உறுதிப்படுவதற்கும் 260 ஏக்கர் பாசன வசதி பெறுவதற்கும் போதுமான தண்ணீர் வருமா என்பது குறித்து மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று வருவாய் வாரியம் திருப்பி அனுப்பி இருக்கிறது. அப்படி மறு ஆய்வு செய்யும் போது, கூடன்குளத்தில் அணுமின் நிலையம் அமைக்கும் திட்டம் இருப்பதால் அதற்குத் தேவையான தண்ணீர் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் பற்றியும் சேர்த்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

குடகனாறு அணை

* 423 வினா—திரு. ரா. மார்க்கபந்து, திரு. கு. ரமணி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடகனாறு அணை உடைப்பு பற்றி விசாரிக்க அமைக்கப்பட்ட நீதி விசாரணைக் கமிஷன் பணிகள் எந்த நிலையில் உள்ளன ?